# ஓசியா

கர்த்தரிடத்தில்  திரும்புங்கள்

# புத்தகத்தை ஆக்கியோன்

- ஓசியா என்ற பெயரின் அர்த்தம் ‘‘இரட்சிப்பு’’
- எசேக்கியா ராஜாவின் ஆரம்ப நாட்களில் எழுதப்பட்டது.
- ஓசியாவைக் குறித்து வேதாகமத்தின் வேறுபுத்தகங்களில் எழுதப்படவில்லை.
- அவனது தப்பனின் பெயர்: பெயெரி (1:1)
- அவனது மனைவியின் பெயர்: கோமேரி (1:3)
- அவனுக்கு இரண்டு குமாாரர்களும் ஒரு குமாரத்தியும் இருந்தார்கள்
- ஓசியாவிற்கும் கோமேருக்கும் பிறந்த பிள்ளைகளுக்கு தேவனே இஸ்ரவேலுக்கு அடையாளங்களாக இருக்கும்படியான பெயர்களை வைத்தார்.
- யெஸ்ரயேல் - “தேவன் சிதறடிக்கிறவர்”
- லோருகாமா – “இரக்கஞ்செய்வதில்லை”
- லோகம்மீ – “நீங்கள் என் ஜனமல்ல”
- அவனது ஊழியம் அரை நூற்றாண்டுகள் நீடித்திருந்தது.
- இஸ்ரவேல் சிறைப்பட்டுப்போகும் என்று அவன் சொன்ன தீர்க்கதரிசனம் அவனது வாழ்நாள் காலத்திலேயே நிறைவேறியது.

- அதிகாரங்கள் 14
- வசனங்கள் 197

# வரலாற்றில் இந்தப் புத்தகத்தின் இடம்

- யூதாதேசத்து ராஜாக்களாகிய உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்பவர்களின் நாட்களிலும், யோவாசின் குமாரனாகிய யெஸ்ரயேலின் ராஜாவாகிய யெரொபெயாம் என்பவனின் நாட்களிலும் பெயேரியின் குமாரனாகிய ஓசியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம். (1:1)
- ஓசியா முதலில் யூதாவின் ராஜாவையும் இறுதியில் இஸ்ரவேலின் ராஜாவையும் குறிப்பிட்டிருந்தபோதும் அவன் தெற்கு இராஜ்யத்தின் தீர்க்கதரிசியாக இருந்தான்.
- தெற்கு இராஜ்யத்தின் கோத்திரங்களில் எப்பிராயீம் பெரிய கோத்திரமாய் இருந்ததால் அந்த இராஜ்யம் எப்பிராயீம் என்ற பெயரில் அழைக்கப்பட்டது.
- அவனது ஊழியம் உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா ஆகிய யூதாவின் நான்கு ராஜாக்களின் காலத்திலும், இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாகாஸின் நாட்களிலும் நடந்தது.
- ஆமோஸ் இவனது சமகாலத்தில் தெற்கு இராஜ்யத்தில் தீர்க்கதரிசன ஊழியம் செய்தார்.
- மீகாவும், ஏசாயாவும் இவனது சமகாலத்தில் வடக்கு இராஜ்யத்தில் தீர்க்கதரிசன ஊழியம் செய்தார்கள்.

# இந்தப் புத்தகம் குறித்த ஒரு பார்வை

- இந்தப் புத்தகம் ஓசியாவின் தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் அவனது அனுவங்களின் வழியாக இஸ்ரவேலின் நிலையை எடுத்துரைக்கும் தனிச்சிறப்பு வாய்ந்த புத்தகம்.
- தெற்கு இராஜ்யம் சிறையாக்கப்பட்டபோது யூதாவிற்கு எரேமியா எப்படியிருந்தாரோ அவ்வாறே ஒரு நூற்றாண்டிற்கு முன்பதாக வடக்கு இராஜ்யம் சிறையாக்கப்பட்டபோது இஸ்ரவேலிற்கு ஓசியா இருந்தார்.
- இருவருமே நெஞ்சைநெகிழ வைக்கும் தனிப்பட்ட அனுபவத்திலிருந்து பேசினார்கள்.
- ஓசியாவின் அனுபவம் வீட்டிலும், எரேமியாவின் அனுபவம் நாட்டிலும் நடந்தது.
- எரேமியாக்கு திருமணம் செய்யக்கூடாது என்று தடைவிதிக்கப்பட்டது. ஓசியாவோவுக்கு ஒரு வேசியை திருமணம்செய்துகொள்ள வலியுறுத்தப்படுகிறது.
- ஒரு சோரஸ்திரீயை உன்னிடமாகச் சேர்த்துக்கொள்; (1:2)
- அவன் கோமேரை திருமணம் செய்துகொண்டான். அவள் இவனுக்கு இரண்டு குமாாரர்களையும் ஒரு குமாரத்தியையும் பெற்றாள்.
- அவள் திரும்பவும் சோரமார்க்கமாய் நடந்ததால் ஓசியா அவளை வீட்டைவிட்டு வெளியேற்றினான்.
- ஆனால் உண்மையில்லாத சோரம்போனவளை திரும்பவும் சேர்த்துக்கொண்டு அவளை நேசிக்கும்படி கர்த்தர் ஓசியாவிற்கு சொன்னார்.
- ஓசியாவின் இந்தச் செய்கையின் வாயிலாக கர்த்தர் அவனுக்கு சொன்னது “இப்போது இஸ்ரவேலிடத்தில் எனக்காக பேச நீ ஆயத்தமாகிவிட்டாய். இஸ்ரவேலோ என்னை விட்டுச் சோரம்போனது ஆனாலும் நான் அவளை நேசித்து அவளை அவளுடைய தேசத்திற்கு திரும்பிவரப்பண்ணுவேன்.”

# இந்தப் புத்தகம் குறித்த ஒரு பார்வை

- இந்தப் புத்தகத்தின் மையக்கருத்து "கர்த்தரிடத்திற்கு திரும்புங்கள்"
- கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்; நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார்; நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார். (6:1)
- "திரும்புங்கள்" என்ற வார்த்தை பதினைந்து தடவைகள் வருகிறது. ஆவிக்குரிய சோரம்போகுதலை சொல்லுவதோடு உண்மையாயிருத்தல், மன்னிப்பு, அன்பு என்பவைகளையும் காண்பித்தலே இந்த புத்தகத்தின் நோக்கம்.
- இந்தப் புத்தகம் தண்டித்தல், மறுசீரமைத்தல் என்கிற வட்டப்பாதையில் ஐந்து வட்டங்களாக திரும்ப திரும்ப ஒரு கருத்தை வலியுறுத்துகிறது. தேவன் பாவத்திற்கான தண்டனையை வழங்கினாலும், தனது ஜனங்களை மீண்டும் தம்மிடமாய் எப்பொழுதும் சேர்த்துக்கொள்வார் என்பதே அந்த கருத்து.
- பொய்யுரைத்தல், நன்றியில்லாதிருத்தல், விக்கிரகவழிபாடு செய்தல், கொலை செய்தல், இச்சித்தல் ஆகிய இஸ்ரவேலின் பாவத்தை விளக்க பல உவமானங்கள் காட்டப்படுகின்றன.

**இந்தப் புத்தகத்தில் வெளிப்படுத்தபடும் தேவனுடைய சுபாவங்கள்**

- அவரது பரிசுத்தம் (அதி 4-7)
- அவரது நீதி (அதி 8-10)
- அவரது அன்பும் இரக்கமும் (அதி 11-14)

# ஓசியாவின் முக்கிய பகுதிகள்

## I. தனிப்பட்ட வாழ்க்கை

- தீர்க்கதரிசியும் அவனது உணமையில்லாத மனைவி கோமேரும் அதி 1-3

A. கோமேர் என்னும் சோரஸ்திரியை திருமணம் செய்துகொள்ளல் அதி 1

B. கோமர் உண்மையாயில்லை என்பதை நிரூபிக்கிறாள். இஸ்ரவேல் உண்மையாய்யில்லை என்பதை நிரூபித்தது. தேவனோ தாம் உண்மையுள்ளவர் என்பதை நிரூபிக்கிறார் அதி 2

C. கோமரை மீண்டும் சேர்த்துக்கொள்ள ஓசியா கட்டளையிடப்படுகிறான் அதி 3

## II. தீர்க்கதரிசன வாழ்க்கை

- தேவனும் உண்மையில்லாத தேசமான இஸ்ரவேலும் அதி 4-14

A. இஸ்ரவேல் சோரம்போதல் அதி 4-5

1. இஸ்ரவேலில் அக்கிரமம், ஒழுக்கக்கேடு, கர்த்தரின் வார்த்தையை அசட்டை செய்தல், விக்கிரக வழிபாடு போன்ற பாவங்கள் இருந்தன அதி 4

2. இஸ்ரவேல் கர்த்தரை விட்டு விலகினது: கர்த்தர் இஸ்ரவேலை விட்டு விலகினார். இஸ்ரவேலில் சீரழிவு உண்டாயிற்று அதி 5

# ஓசியாவின் முக்கிய பகுதிகள்

B. தனது தற்காலப் பாவங்களுக்காக தண்டிக்கப்படும்:

கடைசிநாட்களில் இஸ்ரவேல் (எப்பிராயீம்) திரும்பும் அதி 6

C. இஸ்ரவேல் (எப்பிராயீம்) தன்னை நேசிக்கிற தேவனிடத்திற்கு திரும்பினால் தண்டனைக்குத் தப்பும் (11:8) அதி 7-12

1. இஸ்ரவேல் (பேதையான புறா) எகிப்தியரிடத்திற்கும், அசீரியரிடத்திற்கும் திரும்புகிறது அதி 7
2. இஸ்ரவேல் பாவம்செய்ய பொன் கன்றுகுட்டிகளிடத்திற்கும், அதன் பலிபீடங்களிடத்திற்கும் திரும்புகிறது அதி 8
3. இஸ்ரவேல் (பின்வாங்கும் கிடாரி) தேசத்தின் செழிப்பிற்கு திரும்புகிறது. தேசத்திலிருந்து துரத்திவிடப்படும் அதி 9-10
4. இஸ்ரவேல் தேவனை விட்டுத் திரும்பினது- அது தண்டிக்கப்படும். தேவன் அதை கைவிடமாட்டார் அதி 11-12

D. இஸ்ரவேல் (எப்பிராயீம்) கடைசிநாட்களில் விக்கிரகங்களை விட்டு கர்த்தரிடமாய் திரும்பும் அதி 13,14

1. இஸ்ரவேல் தற்போது தண்டிக்கப்படும் அதி 13
2. இஸ்ரவேல் எதிர்காலத்தில் இரட்சிக்கப்படும் அதி 14